தனியான விடைப் புத்தகத்தினை உபயோகிப்பதுடன் பாடத்தின் பெயரினை **“வியாபாரச் சட்டம்”** என எழுதுக.

முழுப் பதிப்புரிமையுடையது

aat SRI LANKA

**இலங்கைக் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்**

**இடைநிலைப் பரீட்சை – 2013 ஜுலை**

**வியாபாரச் சட்டம்**

Business Law

28-07-2013
மாலை
[2.00 – 3.30]

(56) வியாபாரச் சட்டமும் முகாமையியலும் பாடத்தின் பகுதி

**நேரம்: 01 மணித்தியாலம் 30 நிமிடங்கள்**

பக்கங்களின் எண்ணிக்கை: 02
வினாக்களின் எண்ணிக்கை: 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்:**
  (1) *இது வியாபாரச் சட்டமும் முகாமையியலும் பாடத்தின் “**வியாபாரச் சட்டம்**” பகுதியாகும்.*
  (2) *ஏதேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடை எழுதுக.*
  (3) *விடைகள் யாவும் உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த ஒரே மொழியிலேயே எழுதப்படல் வேண்டும்.*
  (4) *வியாபாரச் சட்டமும் முகாமையியலும் பாடத்தில் பரீட்சார்த்தி ஒருவர் சித்தியடைவதற்கு வியாபாரச் சட்டம் மற்றும் முகாமையியல் ஆகிய ஒவ்வொரு பகுதியிலும் நிலைக்கு ஏற்ப குறைந்த பட்சம் 40% அல்லது 50% புள்ளிகளைப் பெறல் வேண்டும்.*
  (5) *மொத்தம் 50 புள்ளிகள்.*

---

**01.** (a) **இரண்டு** (02) தனிநபர் சட்டங்களைக் (Personal laws) குறிப்பிடுக.

(b) இலங்கையிலுள்ள சட்டமூலங்கள் (sources of law) **இரண்டினைக்** (02) குறிப்பிடுக.

(c) உயர் நீதிமன்றம் (Supreme court) தனது நியாயாதிக்கத்தைச் (jurisdiction) செயல் படுத்தும் **இரண்டு** (02) விடயங்களைக் குறிப்பிடுக.

(d) கொடை முனைவொன்று காலாவதியாகின்ற (an offer lapses) / முடிவு பெறுகின்ற (terminates) வழிமுறைகள் (methods) **இரண்டினைத்** (02) தருக.

(e) கைத்தொழிற் பிணக்குகளின் தீர்வு தொடர்பில் (settlement of industrial disputes) தொழில் ஆணையாளரின் அதிகாரங்கள் **இரண்டினைக்** (02) குறிப்பிடுக.

(02 x 5 = 10 புள்ளிகள்)

**02.** “சார்ந்த பகுதியினருக்கிடையிலான (Parties) ஒரு உடன்பாடானது ஒப்பந்தம் ஒன்றின் இன்றியமை யாததொரு மூலகமாகும். ஆனால் அத்தகைய ஒவ்வொரு உடன்பாடும் ஒரு செல்லுபடியாகும் ஒப்பந்தத்தை உருவாக்க **மாட்டாது**”.

இக்கூற்றுடன் நீங்கள் உடன்படுகின்றீர்களா?

ஒப்பந்தச் சட்டத்தை (Law of Contract) தொடர்புபடுத்தி உமது விடையை நியாயப்படுத்துக.

(10 புள்ளிகள்)

**03.** ''வார இறுதிச் செய்தித்தாள் ஒன்றில் பழைய மோட்டார் வண்டிகளின் ஏலவிற்பனை ஒன்றுக்கான விளம்பரமொன்றை, பழைய மோட்டார் வண்டி சேகரிப்பதில் ஆர்வமுடையவரான **சமன்** காண்கிறார். ஏலவிற்பனை செய்யப்படவுள்ள வாகனங்களின் பட்டியலில் குறிப்பிடப்பட்ட வாகன மாதிரி (model) ஒன்றுக்கு விலைகூறல் செய்வதற்காக **சமன்** பதுளையிலிருந்து கொழும்புக்குப் பயணித்தார். இருந்தபோதிலும் **சமன்** ஏலவிற்பனைத் தளத்தை அடைந்தபோது, அங்கே வெளியே ஏலவிற்பனை இரத்துச் செய்யப்பட்டுள்ளது'' என்றதொரு அறிவித்தலை அவர் கண்டறிகின்றார்''.

**சமன்** ஏலவிற்பனையாளருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதைப் பற்றிச் சிந்தித்தார். ஒப்பந்தச் சட்ட உள்ளடக்கத்தின்படி (context of law of contract) ஏலவிற்பனையாளருக்கு எதிரானதொரு நடவடிக்கையில் அவர் வெற்றிபெற முடியுமாவென்பதைப் பற்றி **சமனுக்கு** ஆலோசனை வழங்குக.

உங்களது விடைக்கு காரணங்கள் தருக. (10 புள்ளிகள்)

**04.** (a) "அவசியத்தாலான முகமையின் உருவாக்கம்" (creation of agency by necessity) என்றால் என்ன? (04 புள்ளிகள்)

(b) அவசியத்தாலான முகமையின் உருவாக்கத்திற்காகத் திருப்திப்படுத்த வேண்டிய நிபந்தனைகள் எவை?

(03 புள்ளிகள்)

(c) முகவர் ஒருவரின் கடமைகள் **மூன்றினை** (03) எழுதுக. (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**05.** (a) கைமாறத்தகு சாதனங்களின் (Negotiable Instruments) **நான்கு** (04) வகைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(b) கைமாறத்தகு சாதனங்களின் சிறப்பியல்புகள் (characteristics) பற்றி விளக்குக.

(06 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

**06.** கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்களின் சட்டத்தின் கீழ் (Shop and Office Employees Act) தொழிலாளரின் ''வேலை செய்யும் மணித்தியாலங்கள் மற்றும் நலன்புரி வசதிகள்'' தொடர்பில் உள்ள ஏற்பாடுகளைக் கலந்துரையாடுக.

(10 புள்ளிகள்)

- o0o -